# முந்திரியில் நோய் கட்டுப்பாடு

## நாற்று மற்றும் வேர் அழுகல் நோய்

### அறிகுறிகள்

இந்நோயானது பியுசேரியம், ரைக்சோக்டோனியா மற்றும் ஸ்கெலிரோசியம் போன்ற பூஞ்சான கிருமிகளால் உண்டாகுகின்றன. இந்நோயால் 50 சதவீதத்திற்கு மேல் கன்றுகள் இறந்துவிடக்கூடும். ஒட்டுக்கட்டிய இளஞ்செடிகள், முளைத்து வரும் விதைக் கொட்டைகள் மற்றும் வளரும் நாற்றுகள் போன்றவற்றை இந்நோய் அதிகம் பாதிக்கும். நோய் தாக்கப்பட்ட இளம் கன்றுகள் வாடி சோர்ந்த நிலையில் இருக்கும். பின்னர். இலைகள் மஞ்சள் நிறமடைந்து உதிரும். வளரும் நாற்றுகளின் அடிப்பாகத்தில் பட்டைகள் அழுகி காய்ந்துவிடும். இறந்த கன்றுகளை வேருடன் பிடுங்கி பார்த்தால் வேர் உறைகளும் அழுகி காய்ந்திருக்கும்.

### கட்டுப்படுத்தும் முறைகள்

- நாற்றுகள் வைத்திருக்கும் பைகளுக்கு தண்ணீர் சீராக மண் நனையும் அளவிற்கு ஊற்ற வேண்டும்.
- பாலித்தீன் பைகளில் நீர் தேங்காமல் இருக்க போதிய அளவு துவாரங்கள் இட்டு நீர் வடிய வசதி ஏற்படுத்த வேண்டும்.
- நோய் பாதிக்கப்பட்ட கன்றுகளை நாற்றங்காலிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.
- காப்பர் ஆக்ஸிகுளோரைடு என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று கிராம் என்ற அளவில் வேர் நனையம்படி ஊற்ற வேண்டும்.
- மழை ஆரம்பித்த பிறகு வாரம் ஒரு முறை இம்மருந்தினை ஊற்ற வேண்டும்.

## பூங்கொத்து கருகல் நோய்

இந்நோயால் பூந்தண்டு, பூக்காம்பு, பிஞ்சு, காய் மற்றும் கொட்டைகள் அதன் தாக்குதலால் பாதிக்கப்படுகின்றன. நோய் தாக்கப்பட்ட பகுதியில் செம்மை நிறத்தில் சிறுசிறு நீர் ஊறிய புள்ளிகள் தோன்றும். இப்புள்ளிகள் ஒன்றோடொன்று சேர்ந்து பெரிய தழும்புகள் ஆகின்றன. பின் பூந்தண்டுகளும், காம்புகளும் முழுவதுமாக காய்ந்து கருகிவிடும். இந்நோய் உண்டாக்கூடிய பூஞ்சாணம் ஏற்கனவே வேப்பிலைக்கொசுவால் பாதிக்கப்பட்ட தழும்புகள் வழியாக உட்புகுத்தி தாக்கி நோயை ஏற்படுத்துவதால் இதனை “கொல்லி நோய்” என்றும் கூரை நோய் என்றும் சொல்வார்கள்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

வேப்பிலைக் கொசு தாக்குதலினால் ஏற்படும் இந்நோயை கட்டுப்படுத்த மானோகுரோடோபாஸ் (அ) கார்பரில் இவற்றில் ஏதாவது ஒன்றுடன் டைத்தேன் எம்.45 என்னும் நோய் கொல்லி மருந்தை 2 கிராம்/லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

**பறவை கண் நோய்**

இந்நோயானது இளம் இலைகள் மற்றும் தண்டுகள், பூங்கொத்துகள், பிஞ்சுகாய்கள் ஆகியவற்றைத் தாக்கும். இந்நோயால் தாக்கப்பட்ட பகுதியிலிருந்து செம்பழுப்பு நிறத்தில் மினுமினுப்பாக நீர் ஊறிய அகல புள்ளிகள் தோன்றும் மற்றும் கோந்து போன்ற வழவழப்பான பிசின் கசியும். இப்புள்ளிகள் பார்ப்பதற்கு பறவையின் கண் போன்ற உள்ளதால் பறவைக் கண் நோய் என்று கூறுவர்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

நோய் தாக்கப்பட்ட பகுதிகளை சேகரித்து எரிக்க வேண்டும். நோயினால் ஆரம்ப அறிகுறிகள் தென்படும் போது போர்டோ கலவை 1 சத சரைசல் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

**பின்கருகல் நோய்**

செந்தண்டு நோய் என்றும் கூறப்படும் இந்நோய் நுனி சிம்பு கிளைகளையே தாக்கும். கிளையின் பட்டை பகுதியின் மேல் வெள்ளை அல்லது இளஞ்சிவப்பு வெள்ளை நிறத்தில் பூசண வளர்ச்சி காணப்படும். இப்பூசணம் மரத்திசுக்களுக்குள் நுழைந்து வளரும். தண்டுக்குள்ளே கிடைக்கும் சாற்றை உறிஞ்சுவதால், நோய் தாக்கப்பட்ட சிம்புகள் மற்றும் கிளைகள் நுனியிலிருந்து கீழ் நோக்கி காய்ந்து கொண்டே வரும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

நோய் தாக்கப்பட்ட கிளை பாகத்தை வெட்டி, வெட்டிய பாகத்தில் போர்டோ பசை தயாரித்து நன்றாக பூச வேண்டும். போர்டோ பசைக்கு பதிலாக பைட்டலான் என்னும் நனையும் தூள் மருந்துடன் சிறிது தண்ணீர் சேர்த்து பசை போல் தயாரித்து பயன்படுத்தலாம்.

**வாடல் நோய்**

இது முதிர்ந்த மரங்களை தாக்கும் மிக முக்கியமான நோய். இந்நோய் தாக்கிய தண்டின் அடிப்பாகத்தில் உள்ள இடுக்குகள் வழியான கருஞ்சிவப்பு

நிறத்தில் சாறு வடியும். தண்டின் அடிப்பாகத்தில் அரைத் தட்டு வடிவில் பூசண வளர்ச்சி காணப்படும். முடிவில் மரம் முழுவதும் காய்ந்துவிடும்.

### கட்டுப்படுத்தும் முறைகள்

நோய் தாக்கிய மரத்தை சுற்றி 4 அடி தூரத்தில் 3 அடி ஆழம், 3 அடி அகலத்தில் குழி வெட்ட வேண்டும். குழியில் போதிய அளவு கந்தக தூளை சீராக தூவ வேண்டும். இம்முறையினால் நோய்க் கிருமிகள் நோய் தாக்கப்பட்ட மரத்திலிருந்து மற்ற மரங்களுக்கு பரவாமல் தடுக்கப்படுகிறது. மரத்தை சுற்றி தண்டு வேர்கள் நன்கு நனையுமாறு 40 லிட்டர் போர்டோ கலவை ஊற்ற வேண்டும். இம்முறையை 6 மாத இடைவெளியில் 3 தடவை பின்பற்ற வேண்டும்.

### போர்டோ கலவை தயாரிக்கும் முறைகள்

போர்டோ கலவை - 100 லி தயாரிக்க தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| மயில் துத்தம் | - 1 கிலோ |
| சுட்ட சுண்ணாம்பு | - 1 கிலோ |
| தண்ணீர் | - 100 லி. |
| வாளி (பிளாஸ்டிக்) | - 2 |

முதலில் 1 கிலோ மயில் துத்தம், 1 கிலோ சுட்ட சுண்ணாம்பு இரண்டையும் தனித்தனியே 5-10 லிட்டர் தண்ணீரில் நன்கு கலந்து பிளாஸ்டிக் வாளியில் வைக்க வேண்டும். பிறகு மயில் துத்தம் கரைசலை சுண்ணாம்பு கரைசலில் ஊற்றி நன்கு கலக்க வேண்டும்.

### செய்ய வேண்டியவை

போர்டோ கலவை தயாரித்த பின்னர் அதன் நச்சுத் தன்மையை அறிவது மிக மிக முக்கியம். இதை அறிந்துகொள்ள பளபளப்பான கத்தி அல்லது பிளேடு போன்றவைகளை இந்த கலவையில் 5-10 நிமிடங்கள் வரை வைக்க வேண்டும். நச்சுத் தன்மை இருந்தால் கத்தி (அ) பிளேடின் மேற்பரப்பில் செந்நிற திட்டுகள் காணப்படும். இதனை போக்க சுண்ணாம்பு கரைசலை ஊற்ற வேண்டும். ஒரு நாள் வரை இந்த கலவையை வைத்து இருக்க சிறிது வெல்லம் சேர்த்து கொள்ள வேண்டும்.